88

ஓம்.



பாரதமாதா துணை.

# காந்தி ரத்நாகரம்.

இஃது
"சுயராஜ்ய தீரர் பாட்டு" "சுதேச பக்தாமிர்தம்"
முதலிய தேசியகீத நூல்களின் ஆசிரியர்
மருதகிரி முருகனின் திருவருட் கவிராஜ விகடகேசரி
**கோவை ரா. குழந்தை**
இயற்றியது.

திருப்பூர்
தண்டபாணி பிரிண்டிங் ஹவுஸில்
பதிப்பிக்கப்பட்டது.
**1923**

-0 விலை அணா 0—2—0

1 - MAR
894.811
2923
M7K
N23
180856

ஓம்.



1-MAR 192

வந்தேமாதரம்.

## விநாயகன் துதி.

180856

நித்தியமா பித்துரையோர் பத்தியுடன் சுத்திபெற
எத்திசையும் நத்துமெழில் உத்தமமா முத்தமய
அத்திமுகன் சித்தியடி புத்திதனில் வைத்துநிதம்
சத்தியமாம் பக்தர்புகழ் பாடுவேன் யான்றுணிந்து

## முருகன் துதி.

(திருவுற்றிலகு கங்கை வரையிற் புகழ்மிகுந்த" என்ற வர்ணமெட்டு.)

திருவற்றுலக சங்கை வறையிற் கவிழ்ந்துருண்டு
தினமெத்தனை துயர் கொண்டேனே மிக
சினமூச் செறிந்துமனம் விண்டேனே கொடு
மாயசாதக சூராகிய தீயர்யாவரும் பூழ்கியெய்திட
சிவசத்திவேல் கொணர்ந்த தீரனே உயர்
தவமுத்தி தருஞ் சுகுமாரனே (திரு)

கருவுற்றிரண்டோ டெட்டு மதியத்திங்கள் கோடி
வழுவப்பிறந்து நானுங் கெட்டேனே பிறவி
நழுவத்துதி யாதுனை விட்டேனே வெகு
காதலாககுறமாதுபாகம் வளர்வேதனே வுலகநாதனே இன்று
பொருளுக்குகந்த பதந்தாருமே கவி
அருளக் குழந்தை துயர் தீருமே (திரு)

———o———

## உலக சிரேஷ்டர் மகாத்மா காந்தி யடிகள் மீது பாடுவது.

---

ராகம்—தன்யாசி. தாளம்—ஆதி.

### பல்லவி.

மங்களம் சேர்நம்ம காந்திமகானைப் போல
மானிலந் தன்னி லுண்டோ?

### அனுபல்லவி.

சங்கட மேந்தி ஜெகக்கடல் நீந்தி
ஜென்ம சாபல்யமோன கன்மப்பிரதாப ஞான (மங்)

இந்தியர் கோஷ்டி இனிமையாய்க் கூட்டி
இன்பமொழி புகன்று துன்பச்சிறை யகன்ற (மங்)

தெய்வ சொரூப தேவப்பிரதாப
திங்களணியுஞ் சிவ சங்கரரெனுந் தவ (மங்)

கோவையின் வாசக் குழந்தையின் நேச
கொள்கை மிகுந்த புகழ் துல்யப்பூமாது மகிழ் (மங்)

(அற்புதப் புதுமையான லப்பர் தோட்டம் என்ற பாட்டின் வர்ணமெட்டு.)

---

பாரதத்தாய் பெற்றமகான் ஞான காந்தி இந்தப்
பாரின்துயர் தீரவந்த மோகன சாந்தி (பா)

நாரதமுனி ராமபிரான் ஆன்மசக்தி நாமும்
நாடித்தேடிக் கூடிக்கொண்டால் சேரும் சக்தி
தீதறப் பயில்வோம் ஆக்ஷி இந்திய
மாதருந் தொண்டே ஸூக்ஷி
கொங்குமா மண்டலக் குழந்தையின் மாக்ஷி
தெய்வமாங் காந்திக்கு ஜேய்! ஜேய்! ஜேய்! (பா)

## பாஞ்சால நாட்டுப் பழந்தேசீயச் சிங்கமாகிய லாலா லஜபதிராய் அவர்கள் மீது பாடுவது.

(மீனுக்ஷி ரமணு வேதாந்த சுகுணு என்ற பாடலின் வர்ணமெட்டு,)

பல்லவி.

180856

லாலா லஜபதி லாவண்யனே திரு (லா)
(லோபசோப கொடுங்கோப தாபமிலா) (லா)

அனுபல்லவி.

மேலான புண்யன் மேதினி கண்யன்
சங்கையில் மிக்க இங்கித மக்கள்
பங்கமதொக்க சங்கரிப்பிக்கும் (லாலா)

தத்துவ கிரீடன் தயானந்தர் சீடன்
தாரணி மெச்சும் சீரணிகழன்
நாரணி நச்சும் பூரண அழகன் (லாலா)

காந்தியின் தாசன் காருண்யர் நேசன்
கொழுந்தமிழ் கோவை குழந்தையின் தூயன்
பழந்தமிழ் பாவை பாரதி சேயன் (லாலா)

பச்சைமலை பவழமலை எங்களது நாடு சாமி எங்களது நாடு
என்ற வர்ணமெட்டு.

---

(1) பக்ஷமுள்ள பாரதத்தாய் பரிந்தளித்த காந்தி—
கிளியே—பரிந்தளித்த காந்தி
பாரிலரும் தெய்வமாகப் பாடிவரும் காந்தி (ப)

(2) இகூஷ்ணமே இந்தியரின் உறிமை வேண்டுங் காந்தி
—கிளியே உறிமைவேண்டுங் காந்தி
ஏக ஜகமானிடரை இரங்கிநோக்குங் காந்தி (ப)

(3) கலியுகத்தின் கொடுமைசாக காக்ஷிதந்த காந்தி
—கிளியே—காக்ஷிதந்த காந்தி
கானமெழும் ராட்டினத்தை காட்டிநின்ற காந்தி (ப)

(4) மெலிவுதனை மாய்த்துநம்மை மேன்மையாக்குங் காந்தி
—கிளியே—மேன்மையாக்குங் காந்தி
மேதினியோர் மோக்ஷமதை மீட்டித்தருங் காந்தி (ப)

(5) கொடுமையில்லா கூர்ஜரத்தில் பிறந்த மஹான் காந்தி
—கிளியே—பிறந்த மகான் காந்தி
கோணலில்லா வாணியரின் குலவிளக்காங் காந்தி (ப)

(6) மடமையில்லா மாமறையின் மர்மஞ்சொல்லுங் காந்தி
—கிளியே—மர்மஞ் சொல்லுங் காந்தி
மாவின் அவதாரமான மஹரிஷியாங் காந்தி (ப)

(7) சாந்தமயமான நெறி செப்புந்திரு காந்தி
—கிளியே—செப்புந்திரு காந்தி
சாதுஜன சங்கமதின் திலகமணி காந்தி (ப)

(8) கோவையினில் வாழுஞ் சிறுகுழந்தை தொழுங்காந்தி
—கிளியே—குழந்தை தொழுங்காந்தி
கோபமின்றி நாமுந்தினம் கொண்டாடுங் காந்தி (ப)

(நூறுதரம் மாறி மாறி என்ற காவடிச்சிந்து வர்ணமெட்டு.)

இந்திய மாதாவின் மக்காள்! சுந்திரமாயின்பம் பெற செப்பு
வேன் யான் இப்பொழுதோர் சேதியே—மனம்—
ஒப்பியே நடந்தால் வரும் நீதியே (1)

ஆதியிலே ஆயகிருஷ்ணன் சூதில்லாத அர்ஜுனற்குக்
கூறியபடியே தர்மம் உய்யவே—புகழ்—
மீறிய மகான்மா ஒளி செய்யவே (2)

அவதரித்தார் காந்தி மகான் அவனி யெங்குந் துயரொழிந்து
அருமை மிகும் சாந்திநிலை கொண்டிட—ஞான—
ஒருமை நெறி தெரிந்து தெய்வங்கண்டிட (3)

அவதரித்த அம்மகானின் நவமுதித்த நன்மொழியை
நாணயமாய்க் கேட்டுக் குறைதீரீரோ—கெட்ட—
வீணழியத் தர்யின்மானம் காரீரோ (4)

உத்தமக் கொள்கைகளான ஒத்துழையா தததுவத்தை
உண்மையாக உங்கள் மனம் கொள்ளுங்கள்—இன்றே—
பெண்மையான பேய் பயத்தை தள்ளுங்கள் (5)

கள்ளுடனே கஞ்சா அபின் சள்ளைமிகும் சாராயமும்
சாவைத்தரும் பீரையுமே வேண்டாதீர்—அவை—
நோவைத்தரும் கொள்ளைவிஷம் தீண்டாதீர் (6)

ஏழைகளாய்ப் போக நீங்கள் கோழைகளைப் போலப்பிற
தேச நய ஆடைதனை வாங்காதீர்—உலகில்—
நீசரென்ற இழிபெயரைத் தாங்காதீர் (7)

சதமில்லா இவ்வாழ்வைநம்பி நிதந்துயரால் நெஞ்சுலர்ந்து
நிலைகுலையத் துயர்க்கடலில் மூழ்காதீர்—உயர்—
சுதந்தரப் பதமில்லாமல் வாழ்காதீர் (இங்)

ஆகையினா லிப்பொழுதே ஈகையுள்ள இந்தியாவை சூழ்ந்
தழிக்கும் வறுமை தன்னை ஓட்டுவீர்—கோவை—
குழந்தை மொழிக்குகந்த தீரங்காட்டுவீர் (9)

---

கோவை நகர் இளஞ்சிங்கமாய் விளங்கிப் பூதவுடலை விடுத்துப்
புகழுடலெய்திய வன்னிகுல திலகரும் உயிர்த்தோழருமான
**ஸ்ரீஜத் ராஜ பூபதி பழனியப்ப நாயகர் அவர்கள் மீது**
**கோவை குழந்தை ஆராத்துயரத்தால் பாடுவது.**

---

(பாதுகையே! பாதுகையே! என்ற வர்ணமெட்டு)

பல்லவி.

பூபதியே! பூபதியே! திரு
புன்னகை தவழ்ந்த மேனி நின்னயதேச்சிய ஞானி (பூ)

அனுபல்லவி.

மாபதிக்கோவை மகிழ்ந்திடுந்தீரா
மாமறைக் காந்தியின் சாந்தப் போர்வீரா
கோபதிக் கோனின் கொள்கை யுதாரா
குவலயம் புகழ்ந்திடும் பாரத வீரா (பூ)

அந்தோ! நாங்கள் தொழுது கலங்க
ஆருயிர் தந்தையும் மருண்டு குலுங்க
வந்தோர் யாவரும் விழுந்து மலங்க
வானுல கேகினாய் வாய்மையாய்த் துலங்க (பூ)

பாரினிலே இருபாலகர் கதர
பாவிகள் நாங்களும் மனமது சிதர
சீரினிலே மிக்க பாரதி பதர
சிக்கென மறைந்திட்டாய் ஜெகத்தினரதிர (பூ)

பழந்தமிழ் பாண்டிய பரம்பரை சீலா
பாவலர் நாவலர் புகழ்ந்திடும் லோலா
குழந்தையின் கவிக்கருங் காரண மூலா
கோவென வழுதிட மறைந்தாயே பாலா (பூ)

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

180856




வந்தேமாதரம்.

தண்டபாணி பிரிண்டிங் ஹவுஸ், திருப்பூர். 2000—காப்பிகள்,